සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 07 | විෂයය / பாடம் / Subject: தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,II | පැය / மணித்தியாலம் / Hours: 2 |

## பகுதி I

(எல்லா வினாக்களுக்கும் விடை தருக)

- சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

1. “ஆழி இறைவனைக் காணவந்தேன்” - இங்கு ஆழி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   i. சக்கரம் iii. தெய்வம்
   ii. கடல் iv. வட்டம்

2. “தினம் இரண்டு வேளை ஆகாரம் உண்டான்” இதில் ஆகாரம் என்பதன் ஒத்தச் சொல்
   i. நீர் iii. தேன்
   ii. மருந்து iv. உணவு

3. உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
   i. 216 iii. 96
   ii. 247 iv. 18

4. மானின் ஆண் கலை போல பெண்
   i. பிணா iii. பெட்டை
   ii. பிணை iv. பேடு

5. புள்ளி மான் சிறிய தோட்டத்தில் துள்ளி ஓடியது இதில் உள்ள எழுவாய் அடைமொழி
   i. சிறிய iii. துள்ளி
   ii. புள்ளி iv. மான்கள்

6. இளவரசன் நல்ல முறையில் ஆட்சி செய்தான் இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய்
   i. நல்ல iii. இளவரசன்
   ii. ஆட்சி iv. செய்தான்

7. சிறிய மாணவர்கள் தமிழ்ப்பாடலை இனிமையாகப் பாடினர் - இதில் உள்ள பயனிலை அடைமொழி
   i. சிறிய iii. இனிமையாக
   ii. தமிழ் iv. பாடினர்

8. பின்வருவனவற்றுள் வல்லினம் மட்டும் கொண்டுள்ள தொகுதி
   i. க,ண் iii. க்,ப்
   ii. ச்,ய் iv. ங்,க்

9. சுட்டு சொல்லாக அமைந்தது.
   i. வானம் iii. அம்மா
   ii. அவன் iv. மரம்

10. இயற்கைப் பொருட்கள் மனித தேவையை நிறைவு செய்கின்றன. இங்கு இயற்கை என்பதன் எதிர்கருத்துச்சொல்

i. செயற்கை
ii. எழில்
iii. யதார்த்தம்
iv. உண்மை

11. “ஆடினான்” என்ற சொல்லின் திணை, பால்

i. உயர்திணை, ஆண்பால்
ii. அஃறிணை, பெண்பால்
iii. உயர்திணை, பெண்பால்
iv. அஃறிணை, ஒன்றன்பால்

12. ஒரு கண்ணை மட்டும் மூடி கொண்டு தூங்கும் பிராணி

i. நாய்
ii. டொல்பின்
iii. யானை
iv. குதிரை

13. ங்,ஞ்,ண்,ந்,ம்,ன், ஆகிய எழுத்துக்கள்

i. மெல்லின மெய் எழுத்துக்கள்
ii. வல்லின மெய் எழுத்துக்கள்
iii. இடையின மெய் எழுத்துக்கள்
iv. நெட்டெழுத்துக்கள்

14. கிரந்த எழுத்து அமைந்த சொல்

i. பாடசாலை
ii. நிலமை
iii. ஆகாயம்
iv. சரஸ்வதி

15. “ஏறு போல் நட” என்பது சான்றோர் கூற்று இங்கு இடம் பெற்றுள்ள நிறுத்தற் குறியின் பெயர்

i. காற்புள்ளி
ii. வினாக்குறி
iii. மேற்கோள்குறி
iv. முற்றுப்புள்ளி

- இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

16. கடலின் ................................... கரையை நோக்கி வந்தது.

i. அழை
ii. அலை
iii. அணை
iv. அளை

17. பெண் யானையை ................................... எனக் கூறுவர்

i. கடுவன்
ii. பேடு
iii. மந்தி
iv. பிடி

18. மலர்களிலிருந்து ................................... வீசியது

i. மணம்
ii. உள்ளம்
iii. அகம்
iv. மனம்

19. பாடகனுக்கு பாடகி போல அரக்கனுக்கு

i. அரச்சி
ii. அரக்கி
iii. அரக்கை
iv. அரக்காரி

20. பறவைகள் கூட்டமாகப் பறந்தன இதில் “பறவைகள்” என்னும் சொல்

i. பெண்பால் சொல்
ii. ஆண்பால் சொல்
iii. பலவின்பால் சொல்
iv. பலர்பால் சொல்

(2x20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம் இரண்டாம் வினா உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடைதருக

1. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினை தெரிவு செய்து 150 சொற்கள் குறையாது கட்டுரை எழுதுக.
   - i. நான் விரும்பும் பெரியார்
   - ii. மாளிகை ஒன்றின் சுயசரிதை
   - iii. நான் ஒரு வைத்தியரானால்
   - iv. எனது பொழுது போக்கு

(20 புள்ளிகள்)

2. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக
   - i. அந்த ரேயின் சுட்டித்தனங்கள் இரண்டினை எழுதுக.
   - ii. "ஆறு" என்ற பாடலைப் பாடியவர் யார்?
   - iii. இயற்கையால் நமக்குக் கிடைக்கும் சிறப்புக்கள் எவை?
   - iv. கடமை என்னும் பாடத்தில் நாம் யாருக்கு கடமைப்பட்டுள்ளோம் எனக் கூறப்பட்டுள்ளது?
   - v. காந்தியடிகள் தங்கியிருந்த சிறைச்சாலை எது?

(4x5=20 புள்ளிகள்)

3. பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியம் எழுதுக
   - i. மனம்
   - ii. பணி
   - iii. வழி
   - iv. அறம்
   - v. அரை

(2x5=10 புள்ளிகள்)

4. பின்வரும் எழுவாய்க்குப் பொருத்தமான பயனிலையை தெரிவு செய்து இணைக்குக.

| | | |
|---|---|---|
| i. | மரம் | உதிர்ந்தது |
| ii. | கமால் | பெய்தது |
| iii. | பூ | விழுந்தது |
| iv. | இலை | வந்தான் |
| v. | மழை | மலர்ந்தது |

(2x5=10 புள்ளிகள்)

5. ஒத்த கருத்துச்சொல்லைத் தெரிவு செய்து எழுதுக
   - i. அடவி :..........................................................................
   - ii. ஆதவன் :..........................................................................
   - iii. எழில் :..........................................................................
   - iv. பூமி :..........................................................................
   - v. பொழில் :..........................................................................

(2x5=10 புள்ளிகள்)

| |
|---|
| அழகு / சூரியன் / காடு / ஞாலம் / சோலை |